அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# பொதுத்தேர்வு மாதிரித்தேர்வுத்தாள்

# தமிழ்

# ஆண்டு 7

| | |
|---|---|
| **நேரம்: 120 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 16** |
| **சுட்டெண்:** | |

# பகுதி – 1

**1. மிகப் பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1. வயலும் வயல் சார்ந்த நிலத்தையும் குறிப்பது
   1. ☐ குறிஞ்சி
   2. ☐ முல்லை
   3. ☐ மருதம்
   4. ☐ நெய்தல்

2. 'சுதேச நாட்டியம்' எனும் பெயரில் சிற்றிதழைத் தொடங்கிய ஈழத்தமிழர்
   1. ☐ சோமசுந்தரப்புலவர்
   2. ☐ சின்னத்தம்பிப்புலவர்
   3. ☐ கல்லடி வேலுப்பிள்ளை
   4. ☐ ஆறுமுகநாவலர்

3. உலக மாந்தர் போரில் இறந்தவர்களுக்கு அகவணக்கம் செலுத்தினர். இதில் வந்துள்ள எழுவாய் அடைமொழி
   1. ☐ போர்
   2. ☐ உலக
   3. ☐ அகம்
   4. ☐ இறந்தவர்

4. பசுமை + கிளி என்பதன் சொற்புணர்ச்சி வடிவம்
   1. ☐ பசுமைக்கிளி
   2. ☐ பைங்கிளி
   3. ☐ பசுக்கிளி
   4. ☐ பசுமைகிளி

5. முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற இடம்
   1. ☐ ஈழம்
   2. ☐ மலேசியா
   3. ☐ இந்தியா
   4. ☐ அமெரிக்கா

6. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று
   1. ☐ ஐங்குறுநூறு
   2. ☐ அகநானூறு
   3. ☐ நெடுநல்வாடை
   4. ☐ புறநானூறு

7. ய், ர், ல், வ், ழ், ள் எழுத்துகள்

1. ☐ குறில்
2. ☐ மெல்லினம்
3. ☐ இடையினம்
4. ☐ வல்லினம்

8. வீரம் சார்ந்த கருப்பொருள்களைக் கதைகளாகக் கொண்ட கூத்து வகை

1. ☐ காமன்கூத்து
2. ☐ வடமோடிக்கூத்து
3. ☐ வசந்தன்கூத்து
4. ☐ தென்மோடிக்கூத்து

9. மகன் போரில் விழுப்புண்பட்ட செய்தியறிந்து தந்தையின் நா தழுதழுத்தது. இதில் தழுதழு என்பது

1. ☐ அடுக்குமொழி
2. ☐ இணைமொழி
3. ☐ இரட்டைக்கிளவி
4. ☐ அடுக்கிடுக்குமொழி

10. சொற்கள் பொருள்படத் தொடர்ந்து நின்று கருத்து முற்றுப்பெற்று நிற்பது

1. ☐ பெயர்ச்சொற்றொடர்
2. ☐ சொல்லியம்
3. ☐ பெயரெச்சச் சொற்றொடர்
4. ☐ வினையெச்சச் சொற்றொடர்

11. குன்றின்மீது நின்று கண்டேன் கோலம் என்ன கோலமே - இச்சொல்லியம்

1. ☐ கூற்றுச்சொல்லியம்
2. ☐ வினாச்சொல்லியம்
3. ☐ ஏவற்சொல்லியம்
4. ☐ மெய்ப்பாட்டுச்சொல்லியம்

12. ஐந்தில் வளையாதது ஐம்பதில்

1. ☐ வளையும்
2. ☐ வளையாதது
3. ☐ வளையுமா?
4. ☐ வளைக்கலாம்

13. மொழிக்கு முதலில் வரும் வினா எழுத்துகள்

1. ☐ எ யா ஏ
2. ☐ யா ஓ ஏ
3. ☐ ஆ ஏ எ
4. ☐ ஆ ஓ யா

14. வளவன் நோய் காரணமாகப் பல நாள்கள் பள்ளிக்குச் செல்லவில்லை. இருப்பினும், தேர்வில் சித்தியடைந்தான். இதில் இணைப்பிடைச்சொல்

1. ☐ தேர்வில்
2. ☐ பல
3. ☐ இல்லை
4. ☐ இருப்பினும்

15. செய்யுள், பா, பாடல் என்னும் பல சொற்கள் குறிக்கும் ஒருபொருள்

1. ☐ கதை
2. ☐ பாட்டு
3. ☐ உரை
4. ☐ தாளம்

16. வானில் விண்மீன்கள் பிரகாசித்தன. இதில் விண்மீன்கள்

1. ☐ உயர்திணை பலர்பால்
2. ☐ அஃறிணை பலவின்பால்
3. ☐ அஃறிணை ஒன்றன்பால்
4. ☐ உயர்திணை ஆண்பால்

17. எறும்பு போல சுறுசுறுப்பாக இருக்கவேண்டும். இதில் சுறுசுறுப்பு என்பதன் எதிர்ப்பொருட்சொல்

1. ☐ ஆர்வம்
2. ☐ ஆவல்
3. ☐ சோம்பல்
4. ☐ பேராசை

18. நாம் கொடைப்பண்பு உள்ளவர்களாக வாழ்வோம். இதில் கொடை என்பது

1. ☐ ஈகை
2. ☐ உணவு
3. ☐ உடை
4. ☐ தவம்

19. பன்னிரண்டு என்பதன் சொற்பிரிப்பு வடிவம்

1. ☐ பத்து + இரண்டு
2. ☐ பத்து + ரண்டு
3. ☐ பத் + இரண்டு
4. ☐ பத்து + ரெண்டு

20. அறிவழகன் நேற்று அங்காடிக்குச் சென்றிலன். இதில் சென்றிலன் என்பது

1. ☐ உடன்பாட்டுவினை
2. ☐ எதிர்மறைவினை
3. ☐ செயப்பாட்டுவினை
4. ☐ பிறவினை

(20×1=20 புள்ளிகள்)

**2. பெயராகவும் வினையாகவும் அமைய சொல்லியங்கள் எழுதுக.**

1. **பணி**

பெயர் : ______________________________

வினை : ______________________________

2. **அணை**

பெயர் : ______________________________

வினை : ______________________________

3. **கரை**

பெயர் : ______________________________

வினை : ______________________________

(3X2=6 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் வினாக்களுள் நீங்கள் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. அடங்காப்பற்று என வன்னி ஏன் அழைக்கப்படுகிறது?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2. மானுடவாழ்வின் அடிப்படைத் தேவைகள் எவை?

_______________________________________________

3. மாணவர்களுக்குச் சமூக வலைத்தளங்கள் எவ்வாறு உதவுகின்றன?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

4. சங்ககால மக்களின் வாழ்வியல்முறை எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தது?

_______________________________________________

5. அகச்சுட்டு, புறச்சுட்டு என்பனவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

அகச்சுட்டு: ____________________ புறச்சுட்டு: ____________________

6. கீழ்க்காணும் தொடர்ச்சொல்லியத்தைத் தனிச்சொல்லியங்களாக மாற்றி எழுதுக.
பூநகரி தமிழரின் தலைநகரமாகவும் வணிகநகரமாகவும் ஆதியில் விளங்கியது.

_______________________________________________

_______________________________________________

7. புலம்பெயர்ந்த தமிழர் பண்பாட்டு விழுமியங்களைப் பேணி வாழ்கின்றனர்.
இச்சொல்லியத்தில் வந்துள்ள எச்சவினைகளை எழுதுக.

1. பெயரெச்சம்: ____________________

2. வினையெச்சம்: ____________________

(5X2=10 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் சொல்லியங்களுள் வேற்றுமை உருபேற்ற சொல்லையும் அச்சொல் எத்தனையாம் வேற்றுமை என்பதையும் எழுதுக.**

| எண் | சொல்லியங்கள் | உருபேற்ற சொல் | வேற்றுமை |
|---|---|---|---|
| 1 | கண்ணன் முதியோருக்கு உதவி செய்தான். | | |
| 2 | மாதவியால் அழகான ஓவியம் வரையப்பட்டது. | | |
| 3 | எழிலன் நண்பனோடு நடந்து சென்றான். | | |
| 4 | வேந்தனது மிதியுந்து புதியது. | | |
| 5 | ஆசிரியர் மாணவனுக்குப் பரிசு வழங்கினார். | | |
| 6 | நாம் நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். | | |

(6X1=6 புள்ளிகள்)

**5. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீ தான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணில்
பாய்ந்திடும் எழுச்சி நீ தான்!
ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சில்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே....

- பாரதிதாசன்

1. இப்பாடலில் உலகை ஒன்று சேர்க்கப் பிறந்தது என்று கூறப்படுவது எது?

______________________________

2. யாருடைய நெஞ்சில் பத்திரிகை பிறந்ததாகக் கவிஞர் கூறுகிறார்?

______________________________

3. யாருடைய கண்ணில் பத்திரிகை எழுச்சியை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகிறது?

______________________________

(3X1=3 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் சொல்லியங்களைத் தமிழ்மொழியில் எழுதுக.**

(5×1=5 புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. கூத்து
2. பல்லினப் பண்பாடு
3. காலைக்காட்சி

உள்ளடக்கக் குறிப்புகள்:

- காலைப்பொழுது
- காணும் காட்சிகள்
- மனமகிழ்வு

(15 புள்ளிகள்)

___________________________________

## பகுதி – 2

**1. பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பழனி என்னும் ஊரில் வள்ளல் பேகன் வாழ்ந்து வந்தார். இவர் கடையேழு வள்ளல்களுள் ஒருவர். இவரது கொடைத் தன்மையைப் பாராட்டிப் புலவர் பரணர் வெகுசிறப்பாகப் பாடியுள்ளார். வள்ளல் பேகன் கொடை வழங்குவதில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு பார்க்கமாட்டார். மயில் குளிரால் நடுங்கியபோது பேகன் தான் போர்த்திருந்த அழகிய போர்வையை எடுத்து அக்கறையோடு போர்த்திவிட்டார். முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளல் பாரியைப் போல மயிலுக்குப் போர்வை கொடுத்த பேகனின் புகழ் நாடெங்கும் பரவியது. இக்கொடைச் சிறப்பைப் புலவர் பரணர் புறநானூற்றில் பாடியுள்ளார். வள்ளல் பேகனை வையாவிக்கோ, கழற்கால்பேகன் எனப் பல பெயர்களால் அழைத்தனர்.

1. பேகனின் வள்ளல் தன்மையை வெகுசிறப்பாகப் பாடிய புலவர் யார்? (1 புள்ளி)

______________________________________________

2. வள்ளல் பேகன் வாழ்ந்த ஊர் எது? (1 புள்ளி)

______________________________________________

3. வள்ளல் பேகனின் மறுபெயர்கள் எவை? (2 புள்ளிகள்)

______________________________________________

4. பேகனின் வள்ளல் தன்மைக்கு ஒப்பிடப்பட்டுள்ளவர் யார்? (1 புள்ளி)

______________________________________________

5. வள்ளல் பேகனின் கொடைச்சிறப்பைப் புலவர் பரணர் எந்நூலில் பாடியுள்ளார்? (1 புள்ளி)

______________________________________________

6. பேகனின் புகழ் நாடெங்கும் பரவக் காரணம் யாது? (2 புள்ளிகள்)

______________________________________________

7. பேகனின் கொடைத்தன்மை எவ்வாறானது? (2 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

(10 புள்ளிகள்)

**2. அறிவித்தலைப் படித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

## நலம் காக்கும் இயற்கைக் குடிநீர்கள்



துளசிநீர்



இளநீர்

மூலிகைகள் மட்டுமல்ல
நாம் அன்றாடம் பயன்படுத்தும் சில உணவுப் பொருள்களை நீரில் ஊறவைத்தோ, கொதிக்க வைத்தோ பயன்படுத்துவதும் எமது நோய் எதிர்ப்பு ஆற்றலைப் பெருக்கும். இவை தற்போது பெருகிவரும் நோய்த்தொற்றுகளில் இருந்தும் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள உதவுகின்றன. மேலும் காய்ச்சல், கழுத்துவலி, மூட்டுவலி, நீரிழிவு, புற்றுநோய் போன்ற ஏராளமான நோய்கள் வராமல் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் இவை உதவுகின்றன.



பழங்கஞ்சிநீர்



எலுமிச்சைநீர்

1. நோய்கள் வராமல் தடுக்க இயற்கைக் குடிநீர்களைப் பயன்படுத்தலாம். (    )

2. மூலிகைகளைப் பயன்படுத்தினால் நோய்கள் அணுகும். (    )

3. பழங்கஞ்சி மருத்துவகுணம் நிறைந்த உணவுப்பொருள் ஆகும். (    )

4. சில உணவுப்பொருள்களைக் கொதிக்க வைத்துப் பயன்படுத்துவது நன்மை தரும். (    )

5. துளசிநீர், எலுமிச்சைநீர், இளநீர் போன்றன உடல்நலத்திற்கு உகந்தவை. (    )

(5X1=5புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 20 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 06 | | | |
| 5 | 03 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |